Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (07-01-1991) திங்கட்கிழமை ஓசை; 323

## வரலாற்று நிகழ்வு நினைவாக மக்களிடம் கோட்டைக் கற்கள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளின் நினைவாக யாழ். கோட்டையினைப் பார்வையிடவரும் பெருந்தொகையான பொதுமக்கள் திரும்பிச் செல்லும்போது கோட்டைச் சுவரிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட ஒவ்வொரு கற்களைக் கொண்டு செல்கின்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொதுமக்களின் பார்வைக் (4ஆம் பக்கம் பார்க்க)

- வயோதிபமாது உட்பட ஐவர் மானபங்கம்
- அரிசியாலை உடைப்பு, உதிரிப்பாகங்கள் சூறை
- பாடசாலை வீடுகள் தகர்ப்பு
- துவிச்சக்கரவண்டி உணவுப்பொருள்பறிமுதல்

# இராணுவத்தின் யுத்தநிறுத்த மீறல்கள் கிழக்கில்தொடர்கின்றன!

(மட்டக்களப்பு)

சிறிலங்கா அரசாங்கம் யுத்த ஒய்வை அறிவித்திருந்தபோதும் இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக வெல்லாவெளிப் பகுதியில் பல யுத்த நிறுத்த மீறல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். ஒரு பொதுமகன் சுட்டுக்கொல்லப்பட்டார், ஐந்து பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டார்கள், பலர் தாக்கப்பட்டனர். வீடுகள், பாடசாலைகள், அரிசி ஆலை என்பன கொள்ளையிடப்பட்டபின் தகர்க்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரசு யுத்த நிறுத்த அறிவிப்பை பிரகடனம் செய்த ஜனவரி மூன்றாம் திகதிக்குப் பின்னரும் அசம்பாவித சம்பவங்கள் தென் தமிழீழப் பகுதிகளில் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளிப் பகுதியிலிருக்கும் வாக்காச்சிவெட்டையிலுள்ள பாடசாலையில் அமைந்திருக்கும் அகதி முகாமிற்குள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். கைம்பெண்ணான ஒரு குழந்தைக்குத் தாயாரான 23 வயதான ஒருவரும், 30 வயதான நான்கு குழந்தைகளுக்குத் தாயாரான ஒருவரும், ஐந்து குழந்தைகளுக்குத் தாயாரான 32 வயதான ஒருவரும் இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் கடந்த நாலாம் திகதி இடம்பெற்றுள்ளது. இதே நாளன்று பாலையடிவெட்டைப் பகுதியிலுள்ள 37ஆம் கிராமத்திற்கு வந்த சிறிலங்கா இராணுவத் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### பூபதி

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த பூபதி (செல்லையா நடேசன்) என்பவர் வீர மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஊர்காவற்படை செங்கலடியில் கொள்ளை

(செங்கலடி)

தமிழ் மக்களுக்குச் சொந்தமான செங்கலடியில் இருந்த கடைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றை முஸ்லிம் ஊர்காவற்படையினர் உடைத்துக் கொள்ளையடித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த நாலாம் திகதி இடம்பெற்றுள்ளது.

## இராணுவ மரியாதையுடன் கப். அமலனின் இறுதி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டபின் சிறிலங்கா இராணுவத்தின் கோழைத்தனமான தாக்குதலால் வீரமரணமடைந்த கப்டன் அமலனின் புகழுடல் நேற்றுக்காலை ஒன்பது மணியிலிருந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப் (4ஆம் பக்கம் பார்க்க)

## 2 மாடுகள் அபகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலையடிவெட்டையில் சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு மாடுகளை அபகரித்துச் சென்றுள்ளனர். கடந்த மூன்றாம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## காசோலைகள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் அரசாங்கத் திணைக்களத்தினால் வழங்கப்படும் காசோலைகள் ஆறு மாதம் வரை செல்லுபடியாகும் என மத்தியவங்கி அறிவித்துள்ளது.

இது குறித்து வடக்கு கிழக்கில் உள்ள சகல வங்கிக் கிளைகளுக்கும் அறிவுறுத்தல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## சைக்கிள் திருட்டு

மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த க. பரமேஸ்வரி என்பவருடைய வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் காணாமல் போய்விட்டது. பட்டப்பகலில் நடைபெற்ற இச் சம்பவம் குறித்து மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீடு அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே பயன்படுத்தவும்

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 25 இலட்சம் ரூபாவை அத்தியாவசியம் எனக் கருதப்படும் திட்டங்களுக்கு மட்டுமே செலவிடுமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின்படி எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 25 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு அவர்களது பகுதி அபிவிருத்தி முயற்சிகளுக்கு பயன்படுத்த கேட்கப்பட்டிருந்தது.

## மூச்சு எடுக்க முடியாதபடி மூக்கினுள்ளும், வாயுள்ளும் நீரை ஊற்றினான் எஸ்.ரி.எவ்.

### சித்திரவதை அனுபவித்த மாணவன் தகவல்

(யாழ்ப்பாணம்)

கைகளைப் பின்னால்கட்டி, கால்களையும் கட்டி, உடுத்திருந்த சாரத்தைக் கழற்றி

இறக்கும் நிலையை எட்டும் வரை மூச்சு எடுக்கமுடியாதபடி வாய்க்குள்ளும், மூக்கினுள்ளும் நீரை ஊற்றினான்

இன்னொருவன் உன்னை ரயர் தான் போட்டுக் கொளுத்த இருந்து என்று சொல்லி ரயர் ஒன்றைக் கொண்டுவந்து காட்

பூபதி (செல்லையா நடேசன்) என்பவர் வீர மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஊர்காவற்படை செங்கலடியில் கொள்ளை

(செங்கலடி)

தமிழ் மக்களுக்குச் சொந்தமான செங்கலடியில் இருந்த கடைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றை முஸ்லிம் ஊர்காவற்படையினர் உடைத்துக் கொள்ளையடித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த நாலாம் திகதி இடம்பெற்றுள்ளது.

(மட்டக்களப்பு)

சிறிலங்கா அரசாங்கம் யுத்த ஓய்வை அறிவித்திருந்தபோதும் இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக வெல்லாவெளிப் பகுதியில் பல யுத்த நிறுத்த மீறல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். ஒரு பொதுமகன் சுட்டுக்கொல்லப்பட்டார், ஐந்து பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டார்கள், பலர் தாக்கப்பட்டனர். வீடுகள், பாடசாலைகள், அரிசி ஆலை என்பன கொள்ளையிடப்பட்டபின் தகர்க்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரசு யுத்த நிறுத்த அறிவிப்பை பிரகடனம் செய்த ஜனவரி மூன்றாம் திகதிக்குப் பின்னரும் அசம்பாவித சம்பவங்கள் தென் தமிழீழப் பகுதிகளில் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளிப் பகுதியிலிருக்கும் காக்காச்சி வெட்டையிலுள்ள பாடசாலையில் அமைந்திருக்கும் அகதி முகாமிற்குள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். கைம்பெண்ணான ஒரு குழந்தைக்குத் தாயாரான 23 வயதான ஒருவரும், 30 வயதான நான்கு குழந்தைகளுக்குத் தாயாரான ஒருவரும், ஐந்து குழந்தைகளுக்குத் தாயாரான 32 வயதான ஒருவரும் இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் கடந்த நாலாம் திகதி இடம்பெற்றுள்ளது. இதே நாளன்று பாலையடிவெட்டைப் பகுதியிலுள்ள 37ஆம் கிராமத்திற்கு வந்த சிறிலங்கா இராணுவத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யில் சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு மாடுகளை அபகரித்துச் சென்றுள்ளனர். கடந்த மூன்றாம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## இராணுவ மரியாதையுடன் கப். அமலனின் இறுதி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டபின் சிறிலங்கா இராணுவத்தின் கோழைத்தனமான தாக்குதலால் வீரமரணமடைந்த கப்டன் அமலனின் புகழுடல் நேற்றுக்காலை ஒன்பது மணியிலிருந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காசோலைகள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் அரசாங்கத் திணைக்களத்தினால் வழங்கப்படும் காசோலைகள் ஆறு மாதம் வரை செல்லுபடியாகும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது குறித்து வடக்குக் கிழக்கில் உள்ள சகல வங்கிக் கிளைகளுக்கும் அறிவுறுத்தல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## சைக்கிள் திருட்டு

மாவிட்டபுரம் லோட்டன் வீதியைச் சேர்ந்த க. [illegible] என்பவருடைய வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் காணாமல் போய்விட்டது. பட்டப்பகலில் நடைபெற்ற இச் சம்பவம் குறித்து மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

மூச்சு எடுக்க முடியாதபடி

# மூக்கினுள்ளும், வாயுள்ளும் நீரை ஊற்றினான் எஸ்.ரி.எவ்.

### சித்திரவதை அனுபவித்த் மாணவன் தகவல்

(யாழ்ப்பாணம்)

கைகளைப் பின்னால்கட்டி, கால்களையும் கட்டி, உடுத்திருந்த சாரத்தைக் கழற்றி முகத்தை மூடிச் சுற்றிக்கட்டி, இறக்கும் நிலையை எட்டும் வரை மூச்சு எடுக்கமுடியாதபடி வாய்க்குள்ளும், மூக்கினுள்ளும் நீரை ஊற்றினான் ஒரு எஸ். ரி. எவ். காரன். இன்னொருவன் உன்னை ரயர் தான் போட்டுக் கொளுத்திறது என்று சொல்லி ரயர் ஒன்றைக் கொண்டுவந்து காட்டினான். பின்பு என்னை இருவருமாகச் சேர்ந்து கொட்டனால் தாக்கினர்; தாக்கி எறிந்தனர் என்று நேற்று முன்தினம் தென் தமிழீழத்தில் இருந்து திரும்பிவந்த யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒருவர் தனக்கு விசேட அதிரடிப் படையால் இழைக்கப்பட்ட கொடிய சித்திரவதை பற்றிக் கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பச்சைப் புலிகள் நடமாட்டம் திருமலை நகரில் அதிகரிப்பு

(திருக்கோணமலை)

திருமலை நகரில் பச்சைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. சர்வோதய நிறுவனத்தின் உதவியுடன் பிரட்றிக் கோட்டையில் தங்கியிருந்த சிங்களவர் குடியேற்றப்பட்ட பகுதியான சிறிமாபுரவில் இவர்கள் நிலைகொண்டுள்ளனர். இங்கு சித்திரவதைக் கூடம் ஒன்றையும் நிறுவியுள்ள இவர்கள் வெள்ளை நிற வானில் நடமாடித் திரிந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதாகவும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் கதி பிறகு தெரியவருவதில்லை எனவும் அறியப்படுகின்றது.

## புளொட், ரெலோ குழுவினால் இருதயபுரம் சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

கைத்துப்பாக்கி, கைக்குண்டுகள் போன்ற ஆயுதங்களைத் தரித்திருந்த புளொட், ரெலோ இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்து சோதனையிட்டுள்ளனர். கடந்த நாலாந்திகதி இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

## சாராயத்தின்விலையைகுறைக்க உடன் நடவடிக்கை வேண்டும்

### முதலாளிகள் வர்த்தக சங்கத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாராயத்தின் விலையைக் குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி சாவகச்சேரி தனியார் வர்த்தக நிலைய முதலாளிகள் தமது வர்த்தகர் சங்கத் தலைவரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

தற்போது அதிகரித்துக் கொண்டு போகும் விலைவாசி

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாராளுமன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீடு

## அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே பயன்படுத்தவும்

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 25 இலட்சம் ரூபாவை அத்தியாவசியம் எனக் கருதப்படும் திட்டங்களுக்கு மட்டுமே செலவிடுமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின்படி எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 25 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு அவர்களது பகுதி அபிவிருத்தி முயற்சிகளுக்கு பயன்படுத்த கேட்கப்பட்டிருந்தது.

## யாழ். பல்கலைக்கழகம் என்றால் ‘அப்பீல்’ கிடையாது

### கிழக்கில் இருந்து வந்த பல்கலை மாணவி

(திருநெல்வேலி)

சிறிலங்கா இராணுவத்தாலும் சிங்கள முஸ்லிம் ஊர்காவல் படையை சேர்ந்தவர்களாலும் ரெலோ, புளொட் ஆகிய ஆயுத தாரிகளாலும் மனிதாபிமான மற்றமுறையில் பல இன்னல்களுக்குள்ளாகி அங்கிருந்து தப்பி வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பல்கலைக் கழக ஆனந்த குமாரசுவாமி பெண்கள் விடுதி சிற்றுண்டிச் சாலையில் பத்திரிகையாளர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று மாலை நான்கு முப்பது மணியளவில் இடம்பெற்ற இந்த இரண்டு மணி நேர கலந்துரையாடலில் தென் தமிழீழத்தில் தமிழ் மக்கள் அத்தியாவசிய வசதிகள் அற்ற நிலையில் பெரும் உயிர் இழப்புக்களை சந்திப்பது பற்றி எடுத்துக் கூறினர்.

இந்த சந்திப்பிற்கு நேற்று முன்தினம் வடபகுதிக்கு வந்து சேர்ந்த மாணவர்களில் சுமார் ஐம்பது மாணவர்கள் சமூகம் தந்துள்ளனர். குடா நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள், வானொலி உட்பட கொழும்பு பத்திரிகை [illegible] களும் சமூகம் தந்திருந்தனர்.

அப்பீல் கிடையாது

இந்த கலந்துரையாடலின் ஒருகட்டத்தில் மாணவி ஒருவர் பல்கலைக்கழக மாணவர்கள் தென் தமிழீழப் பகுதியில் படும் கஷ்டங்களை எடுத்துக் கூறும் போது [illegible] மான யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் ரயர் போட்டு எரிக்கப்பட்டதாகவும் வரிசையாக இவ்வாறு கொலைசெய்யப்பட்ட மாணவர்களின் பெயரை எடுத்து கூறினார். அத்துடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் என இராணுவத்திற்கு கூறினால் அதன் பின்பு அவருக்கு “அப்பீல்இடையாது” [illegible] நாம் கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக் கழகம் எனக் கூறி தப்பிக் கொள்வதாகக் கூறினார்.

மஞ்சள் காமாலை நோயினால் 35 பேர் பலி

தென் பகுதியில் பட்[illegible]வியா

(4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கில்

## க. பொ. த. சாதாரண, உயர்தர பரீட்சைகள் ஏப்ரலில்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடைபெறாதிருந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண, உயர்தர பரீட்சைகள் இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சென்ற வருடம் ஓகஸ்ட், டிசம்பரில் நடைபெற இருந்த இந்தப் பரீட்சைகள் சூழ்நிலை சீர்கெட்டு இருந்ததனால் நடைபெறாது இருந்தமை தெரிந்ததே.

தற்போது வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து இரண்டு பரீட்சைகளையும் நடத்த தீர்மானித்திருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த இரு பரீட்சைகளுக்கும் கடந்த வருடம் விண்ணப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தெல்லிப்பளை வைத்தியசாலையில்

## இரண்டு டாக்டர்கள் உட்பட 15பேர் ஓய்வு பெறுகின்றனர்

(மானிப்பாய்)

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை அரசினர்வைத்தியசாலையில் இரண்டு டாக்டர்கள் உட்பட பதினைந்து பேர் இளைப்பாறவுள்ளனர்.

இவர்கள் ஜனவரி மாதம் முதல் வைத்தியசாலைக்கு சமுகமளிக்காததால் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச)

# விக்னா டியூசன் சென்ரர்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புக்கள்

**DAY CLASSES [8.00–2.00]**

பொருளியல் க. கலாகரன்
90 AUG : வினா விடைவகுப்பு பகுதி II 10மணி
91 AUG-: வங்கியியல்/தேசியவருமானம் 9 மணி

கணக்கியல்- S.K பிரபாகரன்
90 AUG-: கம்பனி முடிவுக்கணக்கு - 11மணி
91 AUG-: செம்மையாக்கங்கள் - 10மணி

வர்த்தகம் பிரபல ஆசிரியர்
90 AUG-: வினாவிடை வகுப்பு 12 மணி

மற்றும் அனைத்துப்பாடஙகளும் வழமையான ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றன.

மு. குறிப்பு: கிழமை நாட்களில் நான்கு பாடங்களும் நடைபெறும்.

விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

(B-1820)

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

**92** பிரிவு: 2
**SAT-SUN CLASSES**
ஆரம்பம்: 12.1.91 (2.15)

பொருளியல்- திரு. கலாகரன்
வர்த்தகம்- பிரபல விரிவுரையாளர்
கணக்கியல்- திரு. வன்னியசிங்கம்
அளவையியல்- திரு. சுப்பிரமணியம்
தமிழ்- திரு. குழந்தை
இந்துநாகரிகம் / இந்து சமயம் ] திரு காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்- திரு. குணராசா
அரசியல்- திரு. சிலன்
வரலாறு- திருமதி கமலா குணராசா

மூ. குறிப்பு - 1. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
2. அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(B-1821,

## தை 7 முதல்



**வரிவிளம்பரம்**

### தேவை


தேநீர் தயாரிப்பதில் திறமை உடையவரும் - இடியப்பம் தயாரிப்பதிலும் குசினிவேலைகளிலும் நன்கு அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். ஹோட்டல் றொலெக்ஸ் 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (R-998)

### தவறிவிட்டது

செல்வி சிவகௌரி தெய்வேந்திரம் ஆகிய எனது அடையாள அட்டை No. 64,815, 1748 Vயும், ஆசிரிய அடையாள அட்டையும் திருநெல்வேலி சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தாஸ் ஸ்ரோர்ஸ், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழஙகப்படும். (R-1007)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 — 10 — 1961



உதிர்வு 28 — 11 — 1990

அமரர்

## கிருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன் (ஆமிசிறி)

லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்

அன்பின் உருவமாய், பண்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றி வளர்த்த அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்து 41 ஆம் நாள் என்ன 41 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் மீதுள்ள அன்பும் பாசமும் எம்மைவிட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக!

மயிலங்கூடல், இளவாலை.
தாய், சகோதரம் மனைவி, உற்றார், உறவினர்கள்

(B/1819,

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
இரத்தினமலர்
அந்தோனிப்பிள்ளை



பிறப்பு:- 1934-02-21
இறப்பு:- 1990-12-08

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் கணவன், மகள் மார்கள்:- திருமதி மல்லிகா றொபேட், திருமதி பஞ்சகலா பிரேமராஜன், திருமதி மாதினி குணசீலன் மகன்மார்கள் :- அன்ரன் மகிழ்றாஜ் (சுவிட்சலாந்து) வின்சன் மனோராஜ் (சுவிட்சலாந்து) மற்றும்- மருமக்கள், சகோதரங்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

வற்றாப்பளை, முள்ளியவளை.

(R / 980 )

# ராஜா காமென்றஸ்

★ ராஜா காமென்றஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கைத் திறன்கூடிய தரமான றெடிமேட் ஆடைத் தினுசுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

❋ ஆடவர் ❋ நங்கையர் ❋ மழலைகள்

★ அனைவரினதும் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு)

விபரங்களுக்கு:

**யோகாஸ் புடைவை மாளிகை**
இல, 16, பெரியகடை.

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச்சந்தி, நல்லூர்.

(B-1785)

# Jaffna College Institute of Technology

## VADDUKODDAI.

**FULL TIME TECHNICAL EDUCATIONAL INSTITUTE OFFERING FOLLOWING FACILITIES**

- FULLY EQUIPPED LABORATORIES
- HOSTEL FACILITIES FOR MALE & FEMALE STUDENTS
- LIBRARY
- SPORTS & GAMES & CULTURAL ACTIVITIES

பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் **February** 1991 இல் ஆரம்பமாகின்றன.

92 பிரிவு: 2

**SAT·SUN CLASSES**

ஆரம்பம்: 12.1.91 (2.15)

பொருளியல்- திரு. கலாகரன்
வர்த்தகம்- பிரபல விரிவுரையாளர்
கணக்கியல்- திரு. வன்னியசிங்கம்
அளவையியல்- திரு. சுப்பிரமணியம்
தமிழ்- திரு. குழந்தை
இந்துநாகரிகம் / இந்து சமயம் - திரு காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்- திரு. குணராசா
அரசியல்- திரு. சிலன்
வரலாறு- திருமதி கமலா குணராசா

கு. குறிப்பு: - 1. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
2. அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(B-1821)


(ஆமிசிறி)

லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்

அன்பின் உருவமாய், பண்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றி வளர்த்த அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்து 41 ஆம் நாள் என்ன 41 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் மீதுள்ள அன்பும் பாசமும் எம்மைவிட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக!

மயிலங்கூடல், இளவாலை.

தாய், சகோதரம் மனைவி, உற்றார், உறவினர்கள்

(B/1819)


★ திறன்கூடிய தரமான றெடிமேட் ஆடைத் திறுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

ஆடவர் · நங்கையர் · மழலைகள்

★ அனைவரினதும் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு)

விபரங்களுக்கு:

**யோகாஸ் புடைவை மாளிகை**
இல, 16, பெரியகடை.

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச்சந்தி, நல்லூர்.

(B-1785)


# Jaffna College Institute of Technology

## VADDUKODDAI.

**FULL TIME TECHNICAL EDUCATIONAL INSTITUTE OFFERING FOLLOWING FACILITIES**

- FULLY EQUIPPED LABORATORIES
- HOSTEL FACILITIES FOR MALE & FEMALE STUDENTS
- LIBRARY
- SPORTS & GAMES & CULTURAL ACTIVITIES

பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் **February** 1991 இல் ஆரம்பமாகின்றன.

### 1. Technician Diploma Courses

(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளுக்கேற்பவும் அமைக்கப் பட்டது.

i) Electronics & Communication
ii) Mechanical Engineering
iii) Electrical Engineering
iv) Civil Engineering (2 years)

கல்வித்தகைமை: G. C. E (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

காலம்: 3 வருடங்கள்

### 2. Diploma Courses (ஆங்கிலமூலம்)

i) Draughtsmanship (Civil)
ii) Computer Programming & Data Processing

(Basic, Cobol & d Base III+) Practical on IBM - PC, AT & MAT 386 Industrial Controler

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: One Year

### 3. Engineering Course

(6 Semesters)

Full time, Preparing students for E C E. Part I (London) exam, & I. E S, L Part I exam

Qualification: G. C. E. (A/L) Maths with 3 or 4 passes in two sittings

### 4. Tech. Certificate Course

(ஆங்கில மூலம்)

i) Radio & T V Servicing
ii) Automobile Practice
iii) A/C & Refrigeration Practice.

கல்வித்தகைமை: G. C. E. (O/L) with Maths& Science
காலம்; One Year

### 5. Craft Certificate Courses

(தமிழ் மூலம்)

i) இயந்திரசாலைப் பயிற்சி (Machine Shop Practice)
ii) ஒட்டுனர் பயிற்சி (Welding Practice)
iii) மின்னிணைப்பு (Wiring Practice)

கல்வித்தகைமை: G. C. E. (O/L) படித்திருத்தல் வேண்டும்,
காலம்: ஒரு வருடம்

முக்கிய குறிப்பு: நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 - 01 - 1991**

- பணிப்பாளர்.

(B-1822)


தை 7 முதல்

க.பொ.த சாதாரணதரம் O/L
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(B-1797)


## முக்கிய அறிவித்தல்

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

இதுவரை தென்தமிழீழ மக்களின் துயர் நீக்கும் பணிக்கு தமது பங்களிப்பைச் செய்யத் தவறியோர் 12-01-91 க்கு முன்னர் பின்வரும் முகவரியில் இயங்கும் எமது புதிய அலுவலகத்தில் செலுத்தவும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
நிர்வாகச் செயலகம்,
தனியார் கல்விப்பிரிவு,
சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்

(R-1005)

## சிந்தனைக்கு

பொய் ஒற்றைக் காலில் நிற்கிறது;
மெய்க்குக் கால்கள் இரண்டே.

— பெஞ்சமின் ஃபிராங்க்ளின்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 07-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## ஒருபிடி சோற்றில் முழுப் பூசனிக்காயை மறைக்க...

"தமிழருக்கு எதிராக நாம் போர் நடத்தவில்லை, நடத்தப்போவதுமில்லை. அதேவேளை விடுதலைப்புலிகள் குறிப்பிட்டது போன்று தமிழர்மீது இனப்படுகொலைகளை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவுமில்லை."

இவ்வாறு ஒருவாரகால யுத்த ஓய்வை அறிவித்து சிறிலங்கா அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் ஏனைய தமிழ்க் குழுக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் ஆதரவு அரசாங்கம் இனப்படுகொலைகளைப்புரியவில்லைஎன்பதற்கு சான்று பகருகின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அறிக்கைகள் விடுவதன் மூலம் அரசாங்கம் தனது செயற்பாடுகளையோ, அன்றி அவற்றால் ஏற்பட்டுள்ள விளைவுகளையோ மறுத்துவிடவோ, மறைத்துவிடவோ முடியாது.

கடந்த ஜூன் மாதத்தில் மோதல் ஏற்பட்டதன் பின் 5000க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இலட்சக்கணக்கில் அகதிகளாகி உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் முகாம்களில் வாழ்கின்றார்கள். அத்தோடு பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை சிறிலங்கா இராணுவம் அழித்துள்ளது; சூறையாடியுள்ளது.

இனப்படுகொலையிலோ, இனஒடுக்கு முறையிலோ சிறிலங்கா இராணுவம் ஈடுபடவில்லை என்றால் மேற்கூறிய படுகொலைகளும், அழிப்புக்களும் யாரால் மேற்கொள்ளப்பட்டன? 1988 இலும், 1989 இலும் ஜே.வி.பி. இயக்கத்தினருக்கு எதிராகப் போராடிய சிறிலங்கா இராணுவத்தினர் குடியிருப்புக்கள் மீது விமானத் தாக்குதல்களையும், கடற்படைப் பீரங்கித் தாக்குதல்களையும் அல்லது ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டார்களா? அல்லது சிங்களப் பொதுமக்களின் சொத்துக்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அழிவை ஏற்படுத்தினார்களா? ஜே.வி.பிக்கு எதிராக இரண்டாண்டுகள் நடைபெற்றதீவிர அழிப்பு நடவடிக்கையில் யாராவது சிங்களவர் அகதிகளானார்களா? அல்லது ஜே.வி.பி. இயக்க உறுப்பினர் வீடுதானும் இராணுவத்தால் அழிக்கப்பட்டதா? குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதா?

இவை யாவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளில் இருந்து குண்டுவீச்சு விமானங்களும், கடற்படைப் பீரங்கிப் படகுகளும் பெறப்பட்டது; பெறப்படுவது ஏன்? இவற்றில் ஒன்றுதானும் ஜே.வி.பி. இயக்கத்தினருக்கு எதிராகப் பாவிக்கப்பட்டனவா?

அதாவது சிங்கள மக்களது சொத்துக்களையும், பொருளாதார நடவடிக்கைகளையும் பாதுகாப்பதில் அரசாங்கமும், இராணுவமும் அக்கறையாக இருந்தன. ஆனால் ஆறுமாதப்போரில் தமிழ்ப் பொது மக்களுக்கு எதிராகவே அவைசெயற்பட்டன. இந்தக் காலத்தில் தமிழருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் அளப்பரியன. இது இனவாதம் அல்லாமல் வேறென்ன?

அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தான் இனப்படுகொலை செய்யவில்லை என்பதை நியாயப்படுத்த

## பழமாகக் கனிந்த ஒரு மலர்

★ இளையவன் ★

ஈழத்திற்கும் - தமிழகத்திற்கும் இடையே கலை இலக்கிய ரீதியாக நட்புறவுப் பாலம் அமைக்க பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர். கடந்த காலங்களில், ஈழத்தின் இலக்கியக் குரலை தமிழகத்தில் எதிரொலிக்கவைக்கின்றோம் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு, தத்தம சொந்த ஆக்கங்களுக்கு அல்லது தமக்கு வேண்டிய சிலரின் ஆக்கங்களுக்கு சந்தை வாய்ப்பைத் தேடியவைகளாகவே பெரும்பாலும் நம்மவர்கள் நடந்து கொண்டிருக்கின்றனர் என்பதை பொதுவாக எவரும் அவதானிக்கலாம். வாஞ்சிநாதனின் வீரத்திற்கு தலை வணங்கி மணியாச்சி ரயில் நிலையத்தின் மண்ணுக்கு முத்தம் இட்டேன் எனப் பெருமையோடு கூறும் எங்களூரின் இலக்கியவாதிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு மத்தியில் திலீபனின் தியாகத்தை மெச்சி அவனது மூன்றாவது நினைவு நாளை முன்விட்டு தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் இரும்பொறை எழுதிய கவிதை வேள்வி என்னும் தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளது.

இக்கவிதை தமிழீழத்தில் இவர் தங்கியிருந்தபோது எழுதப்பட்டிருக்கிறது என்பதை ஒவ்வொரு சொல்லும் எடுத்துச் சொல்கிறது. திலீபனின் தியாகத்தைப் போற்றிய கவிஞர் தமிழீழ மக்களுக்கு எடுத்துச் சொல்லும் செய்திகள் முக்கியமானவை. குண்டு வீச்சுகள், எறிகணைத் தாக்குதல்கள், துப்பாக்கி வேட்டுகள் என்பனவற்றிற்கு அஞ்சி இங்கிருந்தவர்கள் தமிழகக் கரைகளில் தஞ்சம் தேட முற்பட்ட காலத்தில் தமிழீழத்திற்கு விஜயம் செய்திருக்கின்றார் இக்கவிஞர்.

இதனாலே தான்,

"வெற்றியின் விளிம்பில்
வீரராய்ச் சாகாமல்,
அந்நிய மண்ணில்
அகதியாய்ச் சாவேரமா?"

> தமிழகத்தைச் சேர்ந்தவரான கவிஞர் இரும்பொறையின் 'வேள்வி' கவிதைத் தொகுப்பு பற்றிய விமர்சனம்.

என்ற வரிகளின் மூலம் அஞ்சி ஓடும் எம்மவரின் மனச்சாட்சியை உலுப்பி விடுகின்றார். அச்சந்தரும் சூழ்நிலையை - பதற்றத்தை ஏற்படுத்தும் பயங்கரங்களை மறுத்து விடாத கவிஞர் அவர்கள் "பதுங்கு குழி இல்லா கோயிலும் வீடும் பாழ்" எனக் கூறுவதன் வாயிலாகஇன்றைய சூழலை எதிர்நோக்கும் வழியையும், அழகாகச் சித்திரித்துள்ளார். இந்தப் பதுங்கு குழிகளினுள்ளே பதுங்கும் வாழ்க்கையும் எதற்காகபுதைகுழிக்குப் போகும் முன்னே பகைவர் மேல் பாய்வதற்கே என அறுதியிட்டுக் கூறுகின்றார். தெய்வம் கூடப் பதுங்கு குழிக்குள்ளேயே பாதுகாப்புத் தேட வேண்டிய நிலையில் "பிள்ளையாருக்கு மற்றும் தண்ணீர் பின்பக்கம் வாழைக்கும் பாய்ந்திட வழிசெய்வோம்" எனக் கூறுவதன் வாயிலாக பொருளாதார அபிவிருத்திதேடும் - அவசியத்தை சொல்லிச் செல்லும் கவிஞர் அவர்கள் "கோழி இல்லாவீட்டில் குடியிருக்க வேண்டாம்" என்ற புதுமொழி ஒன்றையும் படைத்து அளித்துள்ளார்.

எங்கள் தேசத்தின்விடுதலை ஒன்றையே உணர்வில் கொண்டிருக்க வேண்டிய எமது மக்கள் "நாகரிகப் பொருளை எல்லாம் நாடாமல் விட்டுவிட்டால் நாளை நாடு நமதாகும்" என வலியுறுத்தியிருக்கும் இடம் எமது மக்கள் சிந்திக்க வேண்டிய விடயமாகும். வாசலிலே இருக்கின்ற பூந்தொட்டிகளில், கத்தரியும் வெண்டையும் காய்க்குமானால் இனிமாச் இறக்கிகள் போலிருக்கும் குரோட்டன்களின் வேர்கள் வெட்டப்படுமானால் சுயசார்பு பொருளாதாரம் தழைத்தோங்கும்; தேவைகளைக்குறைப்பதாலே தேசத்தின் விடுதலைக்குஉதவி செய்வோம் என ஒவ்வொருவரையும் அழைக்கும்போது கவிஞரை ஒரு தமிழகத்தவராக அல்லது இந்தியராக இனம்காண இதயம் மறுக்கின்றது. எங்களுக்கும் - எமது மக்களுக்கும் மிக நெருக்கமாக நின்று ஆலோசனை கூறும் ஆப்த நண்பராக விளங்கிறார் கவிஞர் இரும்பொறை.

## "போராட்டத்தைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தபெருமை ரவியையே சாரும்"

- பொன். பூலோகசிங்கம்

"மறைந்த போராளி ரவிசேகரன் பல்வேறு பரிமாணங்களையுடையவராவர். கல்லூரியல் மாணவனாக இருந்த காலத்திலேயே பொதுப்பணிகளை ஆரம்பித்த ரவிசேகரன் பல்கலைக்கழகத்தில் நுழைந்த பின்னர் மறுமலர்ச்சிக் கழகத்தின் பணிகளை விஸ்தரித்து பல்கலைக்கழக மாணவர்களும் எமது மண்ணில் இடம் பெறும் போராட்டத்தில் பங்களிப்பு செய்யக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கினார். தான் சார்ந்த விடுதலை இயக்கத்தின் அரசியல் பணிகள் பல்வேறு முனைகளிலும் வளர்ச்சி பெற்று போராட்டம் கூர்மையடைவதற்கான அத்திவாரத்தையிட்டு வைத்தவர் அவரேயாவர். இந்தவகையிலே

டம் முனைப்படையும் போது எதிரி பொருளாதாரத்தடைகளை மேற்கொண்டு போராட்டத்தை நசுக்கக் கூடும் எனக் கருதிய ரவிசேகரன் தீர்க்க தரிசனத்தோடு பொது மக்களை உணவு உற்பத்தியில் ஈடுபட ஊக்கப்படுத்தினான். உபஉணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டான்.

ஒரு சிந்தனையாளன், எழுத்தாளன், இதழாசிரியன், சமூக சீர்திருத்தவாதி, புத்திஜீவி, போராளியாகப் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்திய ரவிசேகரனின் தன்னலமற்ற பங்களிப்புக்கள்தான் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கு ...

பீடங்களையும் சேர்ந்த மாணவ பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

## மூன்று இலக்கம் கொண்ட மாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் மூன்று இலக்கங்களைக் கொண்ட மாதம் ஒன்றை கண்டுபிடித்துள்ளது. மாநகராட்சி மன்றத்தினால் டிசம்பர் மாதச் சம்பளத்திற்காக வழங்கிய காசோலை ஒன்றுக்கு 28 - 013 - 1990 என்று திகதியிடப்பட்டுள்ளது. இவ்வாறாகத் திகதியிடப்பட்ட ...

கடந்த ஜூன் மாதத்தில் மோதல் ஏற்பட்டதன் பின் 5000க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இலட்சக்கணக்கில் அகதிகளாகி உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் முகாம்களில் வாழ்கின்றார்கள். அத்தோடு பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை சிறிலங்கா இராணுவம் அழித்துள்ளது; சூறையாடியுள்ளது.

இனப்படுகொலையிலோ, இனஒடுக்கு முறையிலோ சிறிலங்கா இராணுவம் ஈடுபடவில்லை என்றதால் மேற்கூறிய படுகொலைகளும், அழிப்புக்களும் யாரால் மேற்கொள்ளப்பட்டன? 1988 இலும், 1989 இலும் ஜே.வி.பி. இயக்கத்தினருக்கு எதிராகப் போராடிய சிறிலங்கா இராணுவத்தினர் குடியிருப்புக்கள் மீது விமானத் தாக்குதல்களையும், கடற்படைப் பீரங்கித் தாக்குதல்களையும் அல்லது ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டார்களா? அல்லது சிங்களப் பொதுமக்களின் சொத்துக்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அழிவை ஏற்படுத்தினார்களா? ஜே.வி.பிக்கு எதிராக இரண்டாண்டுகள் நடைபெற்றதிவிர அழிப்பு நடவடிக்கையில் யாராவது சிங்களவர் அகதிகளானார்களா? அல்லது ஜே.வி.பி. இயக்க உறுப்பினர் வீடேதானும் இராணுவத்தால் அழிக்கப்பட்டதா? குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதா?

இவை யாவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளில் இருந்து குண்டுவீச்சு விமானங்களும், கடற்படைப் பீரங்கிப் படகுகளும் பெறப்பட்டது; பெறப்படுவது ஏன்? இவற்றில் ஒன்றுதானும் ஜே.வி.பி. இயக்கத்தினருக்கு எதிராகப் பாவிக்கப்பட்டனவா?

அதாவது சிங்கள மக்களது சொத்துக்களையும், பொருளாதார நடவடிக்கைகளையும் பாதுகாப்பதில் அரசாங்கமும், இராணுவமும் அக்கறையாக இருந்தன. ஆனால் ஆறுமாதப்போரில் தமிழ்ப் பொது மக்களுக்கு எதிராகவே அவைசெயற்பட்டன. இந்தக் காலத்தில் தமிழருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் அளப்பரியன. இது இனவாதம் அல்லாமல் வேறென்ன?

அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தான் இனப்படுகொலை செய்யவில்லை என்பதை நியாயப்படுத்த தம்முடன் இணைந்துள்ள போக்கிடமற்ற தமிழ்க் குழுக்கள் தமக்கு வழங்கும் ஆதரவைக் காட்ட முற்படுகின்றது.

ஆனால், இந்த தமிழ்க் குழுக்கள் பற்றி சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவே ஒரு தடவை குறிப்பிடும்போது இவர்கள் உணவிற்காகவும், பாதுகாப்பிற்காகவுமே எம்முடன் இணைந்துள்ளார்கள். இவர்கள் உண்மையில் எமக்கு ஆதரவாகச் செயற்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை இந்தக் குழுக்கள் யார்? இவர்களின் பலம் என்ன? மக்கள் மத்தியில் இவர்களுக்குரிய ஆதரவு என்ன, என்பதை சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்தத் தமிழ்க் குழுக்களை வைத்துக்கொண்டு தமிழர்கள் மீது படுகொலைகள் நடைபெறவில்லை என சிறிலங்கா அரசாங்கம் நியாயப்படுத்துமாயின், இவர்களைவிட கூடுதலான குழுக்களையும், ஆட்களையும் கொண்ட தமிழ்க் குழுக்களை வைத்து இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதியை இந்திய இராணுவத்தினர் ஆக்கிரமித்ததையும், அதை நியாயப்படுத்தியதையும் சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா? ஏற்றுக் கொண்டதா? அல்லது இந்தக் குழுக்களைக் கொண்டு தமிழர்களை இந்திய இராணுவம் கொல்லவில்லை என்பதை சிறிலங்கா அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமா?

அவ்வாறாயின் சிறிலங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் இந்தக்குழுக்கள் மீது இந்தியஇராணுவத்தின் மீதும் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவையா?

இவ்வாறான நிலையில், சிறிலங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் தான் கட்டவிழ்த்துவிட்ட இனப் படுகொலையை மறைக்க முற்படுவதிலும், அதற்கு ஆதரவாளர்களைத் தேடுவதிலும் இலாபம் எதுவும் ஏற்படப் போவதில்லை. இலங்கையில் தமிழருக்கு எதிராக இனப்படுகொலைகள் நடைபெறுகின்றன என்பது அப்பட்டமான உண்மை. இன்று சர்வதேச சமூகம் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. சிறிலங்காவிற்கான உதவிகளை பல நாடுகள் குறைக்கத் தொடங்கியதில் இருந்தே இதனை விளங்கிக் கொள்ளலாம்.

வந்துள்ளது.

இக்கவிதை தமிழீழத்தில் இவர் தங்கியிருந்தபோது எழுதப்பட்டிருக்கிறது என்பதை ஒவ்வொரு சொல்லும் எடுத்துச் சொல்கிறது. திலீபனின் தியாகத்தைப் போற்றிய கவிஞர் தமிழீழ மக்களுக்கு எடுத்துச் சொல்லும் செய்தி சூழலை எதிர்நோக்கும் வழியையும், அழகாகச் சித்திரித்துள்ளார். இந்தப் பதுங்கு குழிகளினுள்ளே பதுங்கும் வாழ்க்கையும் எதற்காகபுதை குழிக்குப் போகும் முன்னே பகைவர் மேல் பாய்வதற்கே என அறுதியிட்டுக் கூறுகின்றார். தெய்வம் கூடப் பதுங்கு கவிஞரை ஒரு தமிழகத்தவராக அல்லது இந்தியராக இனம்காண இதயம் மறுக்கின்றது. எங்களுக்கும் - எமது மக்களுக்கும் மிக நெருக்கமாக நின்று ஆலோசனை கூறும் மூத்த நண்பராகி விடுகிறார் கவிஞர் இரும்பொறை.

# "போராட்டத்தைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தபெருமை ரவியையே சாரும்"

\- பொன். பூலோகசிங்கம்

"மறைந்த போராளி ரவிசேகரன் பல்வேறு பரிமாணங்களையுடையவராவர். கல்லூரியல் மாணவனாக இருந்த காலத்திலேயே பொதுப்பணிகளை ஆரம்பித்த ரவிசேகரன் பல்கலைக்கழகத்தில் நுழைந்த பின்னர் மறுமலர்ச்சிக் கழகத்தின் பணிகளை விஸ்தரித்து பல்கலைக்கழக மாணவர்களும் எமது மண்ணில் இடம் பெறும் போராட்டத்தில் பங்களிப்பு செய்யக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கினார். தான் சார்ந்த விடுதலை இயக்கத்தின் அரசியல் பணிகள் பல்வேறு முனைகளிலும் வளர்ச்சி பெற்று போராட்டம் கூர்மையடைவதற்கான அத்திவாரத்தையிட்டு வைத்தவர் அவரேயாவர். இந்தவகையிலே போராட்டத்தைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்த பெருமையும் அவரையே சாரும்"

மேற்கண்டவாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற அமரர், ரவிசேகரனின் ஆறாம் ஆண்டு நினைவுதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விரிவுரையாளர் பொன். பூலோகசிங்கம் குறிப்பிட்டார்.

மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நினைவுக் கூட்டத்திற்கு திரு அருணன் தலைமை வகித்தார்.

திரு. பொன். பூலோகசிங்கம் மேலும் தொடர்ந்து பேசுகையில், "வெளிநாடுகளில் இடம் பெற்றுவரும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் பற்றிய பூரண அறிவை எமது மக்களும் போராளிகளும் பெற்றுக் கொள்ள வேண்டும் என விரும்பிய ரவிசேகரன் பல வெளிநாட்டு விடுதலைப் போராட்டங்கள் பற்றிய நூல்களை மறுமலர்ச்சிக் கழகத்தினூடாக வெளிக் கொணர்வதில் முழுமூச்சாக ஈடுபட்டான். ஐகன் விடுதலைப் போராளிதான்பரின் நிக்கரகுவா போராட்டம், கியூபா, பிலிப்பைன்ஸ் முதலான நாடுகளில் இடம்பெற்ற போராட்டங்கள் பற்றியெல்லாம் தனித்தனி நூல்களை அவன் வெளியிட்டான்.

எதிர்காலத்தில் போராட்டம் முனைப்படையும் போது எதிரி பொருளாதாரத்தடைகளை மேற்கொண்டு போராட்டத்தை நசுக்கக் கூடும் எனக் கருதிய ரவிசேகரன் தீர்க்க தரிசனத்தோடு பொதுமக்களை உணவு உற்பத்தியில் ஈடுபட ஊக்கப்படுத்தினான். உபஉணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டான்.

ஒரு சிந்தனையாளன், எழுத்தாளன், இதழாசிரியன், சமூகசீர்திருத்தவாதி, புத்திஜீவி, போராளியாகப் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்திய ரவிசேகரனின் தன்னலமற்ற பங்களிப்புக்கள்தான் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கு மூல காரணமாக அமைந்தன என்றார்.

ஏராளமான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்ட இந்த வைபவத்தில் பல்வேறு பீடங்களையும் சேர்ந்த மாணவ பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

# மூன்று இலக்கம் கொண்ட மாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் மூன்று இலக்கங்களைக் கொண்ட மாதம் ஒன்றை கண்டுபிடித்துள்ளது. மாநகராட்சி மன்றத்தினரால் டிசம்பர் மாதச் சம்பளத்திற்காக வழங்கிய காசோலை ஒன்றுக்கு 28 - 012 - 1990 என்று திகதியிடப்பட்டுள்ளது. இவ்வாறாகத் திகதியிடப்பட்ட காசோலையை மாற்றும்வகை தெரியாமல் சம்பந்தப்பட்ட ஊழியர் பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளார்.

# சித்தீ எய்திடாவிடில் மீண்டும்...

நண்பனே கலக்கம் வேண்டாம்
கண்களைத் துடைத்துக் கொள்ளும்
பாரினில் தமிழைக் காக்கப்
போரினைத் தொடுத்த புலிகள்
பாதியில் நிறுத்திக் கொண்டார்!
இதுதானே உந்தன் துக்கம்?

சபலங்கள் உனக்கு வேண்டாம்!
சண்டைகள் நிறுத்திக் கொண்டே,
பேசவே எண்ணும் புலிகள்
பயனேதும் இல்லை என்றால்,
தொடர்ந்தும் விடுதலை வேள்வியினை
நடத்தியே ஆவார் நண்பா!

நிரந்தரத் தீர்வு ஒன்றை
நிலைநாட்டித் தீரும் மட்டும்
கரங்களால் துப்பாக்கி, படைக்கலங்களை
கழற்றியே வைக்க மாட்டார்
புல்களை உண்டு புலிகள்
புளகாங்கிதம் அடைவதுண்டோ?

பேசியே நாம் கண்ட
அனுபவம் நமக்கு ஏராளம்
இருந்த பொழுதிலும் பாடங்கள்
பலவற்றைப் படித்துக் கொடுத்திட்டு
பரீட்சை வைக்கிறார் புலிகள்
சித்தி எய்தாட்டால் மீண்டும்...!

— பை.

ஈராக் குவைத்திலிருந்து

# விலகா விட்டால் விளைவுகளை எதிர் கொள்ள வேண்டும்

- ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

குவைத்தில் இருந்து இராணுவப்படை விலகிக்கொள்ள வேண்டும். அல்லது அதனால் ஏற்படப்போகும் பயங்கர விளைவுகளை எதிர்நோக்க தயாராக இருக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக்கை எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் வானொலி மூலம் உரையாற்றிய ஜோர்ஜ் புஷ் ஈராக்கிற்கு விடுக்கும் இறுதி எச்சரிக்கையாக இது இருக்கும் என தெரிவித்தார்.

வரும் புதன்கிழமை ஜெனிவாவில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இந்த இறுதி எச்சரிக்கையை ஒரு செய்தியாக மட்டுமே கொண்டு செல்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஈராக்குடன் எந்த விதமான இரகசிய ராஜதந்திர முயற்சிகளையும் தாம் மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேநேரம் ஈராக் இந்த அறிக்கைகளை நிராகரித்த அதே நேரம் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு ஐரோப்பிய சமூக நாடுகள் விடுத்த கோரிக்கையையும் நிராகரித்துள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அசீஸ் அமெரிக்க கொள்கைக்கு சில ஐரோப்பியநாடுகள் பணிந்து செல்வதை தமது நாடு விரும்பாததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதேவேளை இன்று ஈராக் இராணுவத்தின் 70வது ஆண்டு விழாவாகும். இந்த நாளை ஒட்டி ஜனாதிபதி சதாம் ஹுசேன் விடுக்கும் அறிக்கையானது வளைகுடாப் பிரச்சினையைப் பொறுத்தவரை முக்கியமானதாக கருதப்படுகிறது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கிலும், அமெரிக்காவிலும் போருக்கான பதட்ட நிலை மேலும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மேற்குலக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஈராக்கில் உள்ள வெளியுறவுத் தூதரகங்களில் உள்ளவர்கள் வேறிடங்களுக்குச் செல்வதற்கு தயாராக இருக்கும்படி ஈராக்கிய அரசினால் கேட்கப்பட்டுள்ளனர்.

---

வளைகுடாவில் யுத்தம் ஏற்படின்

# தேயிலை வர்த்தகத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும்

(கொழும்பு)

வளைகுடாவில் போர் ஏற்படுமானால் சிறிலங்காவின் தேயிலைஏற்றுமதியில் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்ற அச்சத்தினை தேயிலை ஏற்றுமதியாளர்கள், தேயிலைக் கூட்டுத்தாபன தலைவர்கள் மற்றும் முகவர்கள சிறிலங்கா வர்த்தகத்துறை அமைச்சிடம் தெரிவித்துள்ளனர்.

போர் ஏற்படும் இந்து ஐந்து வாரங்களுக்கு மேல் தேயிலை ஏலவிற்பனை இடம்பெறாது என்றும் இதனால் தேயிலையை களஞ்சியப்படுத்தமுடியாது என்றும், அவர்கள் தெரிவித்தனர். இதனால் தேங்கிக்கிடக்காத வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை 'ஏயர் லங்கா, நிறுவனம் விமானப் போக்குவரத்து காப்புறுதி 1,50,000 டொலர்களாக அதிகரித்திருப்பதாலும், எண்ணெய் விலை அதிகரித்திருப்பதனாலும் மேற்குலக மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பழம் மற்றும் காய்கறி விற்பனையை மேற்கொள்ள முடியாமல் இருக்கும் எனத் தெரிவித்தது.

---

# கப்டன் பாரூக், சீலன்; நினைவஞ்சலிக் கூட்டம்

(வண்ணார்பண்ணை)

வீரவேங்கைகள் கப்டன் பாரூக், சீலன் ஆகியோரின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 7ஆம் திகதி மாலை 6-00 மணிக்கு ஓட்டுமடம் சந்தியில் நடைபெற உள்ளது.

வண்ணார்பண்ணை சிற்றூரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் அத்துடன் ''அஸ்தமனத்தில் ஓர் உதயம்'' என்ற நாடகமும் பட்டிமன்றமும் நடைபெற உள்ளது

---

# லெப. கேணல் பாண்டியின் நினைவுக் கூட்டம்

(கொக்குவில்)

லெப். கேணல் பாண்டி (குட்டி)யின் 3ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு கொக்...

---

# பாரதீயஜனதாவின் தலைவராக முரளி மனோஜ் ஜோஷி

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சியின் புதிய தலைவராக முரளி மனோஜ் ஜோஷி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் எல்.கே. அத்வானியிடமிருந்து அடுத்த மாதம் 1ஆம் திகதி பதவியினைப் பொறுப்பேற்கவுள்ளார். இந்தக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மனோஜ் ஜோஷி லோக்சபாவின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பாரெனக் கூறப்படுகிறது.

---

# போர் நிறுத்த மரபுகளை சிறிலங்கா மீறி வருகின்றது

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் அரச படைகள் போர் நிறுத்த மரபுகளை மீறியே செயற்படுகிறது. 1987ஆம் ஆண்டும் ஓர் யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் மாவீரர்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு வீர வேங்கைகளை வீர மரணத்துக்கு ஆளாக்கி போர் நிறுத்த விதிகளை சிறிலங்கா அரசு அர்த்தமற்றதாக்கி விட்டது.

இவ்வாறு ஆனையிறவில் வீர மரணமடைந்த கப்டன் அமலனின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட பிரசார பொறுப்பாளர் திரு. அஞ்சநேயர் தெரிவித்தார். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வலிகாமம் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சங்கீதன் தலைமையில் நேற்று நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

விடுதலைப் புலிகள் மனிதாபிமானமுள்ளவர்கள் மண்ணையும், மக்களையும் நேசிப்பவர்கள் என்பதை வெளி உலகிற்கு எடுத்துக்காட்டவே போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனாலும் சிறிலங்கா அரசு தனது கையாலாகாத் தனத்தாலும், இராணுவத்தின் கட்டு மீறிய அடாவடித் தனத்தாலும், கோழைத்தனத்தாலும் யுத்த நிறுத்தத்தை மீறி வருகிறது. இவ் யுத்த நிறுத்த மீறலுக்கு முதற் பலி தான் கப்டன் அமலன். என்றார்.

---

இராணுவ... பட்டிருந்தது?

தென்மராட்சி, வடமராட்சி தீவுப்பகுதி, வலிகாமம்போன்ற பல பகுதிகளில்இருந்தும் வந்த பெருந்தொகையான பொது மக்கள் கப்டன் அமலனுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து வலி-கிழக்கு அரசியற் பொறுப்பாளர் சங்கீதன் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. இராஜன் உட்பட பலர் உரையாற்றினார்கள்

அஞ்சலிக்கூட்டத்தின் பின்பு கப்டன் அமலனின் புகழுடல் இறுதிக் கிரியைக்காக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பான்ட்வாத்தியங்கள் சகிதம் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. வீடுகள் தோறும் பூரண கும்பங்கள் வைத்தும், பூக்கள்சொரிந்தும்மக்கள்அஞ்சலியைச் செலுத்தினர். இறுதியாக கோப்பாய் மாவீரர் மயானத்தில், பான்ட் வாத்திய மரியாதையும், இராணுவ அணிவகுப்பு மரியாதையும் இடம் பெற்றது

---

யாழ் பல்கலைக்...

லும், நோயாலும், மருந்துவசதியின்மையாலும் தொடர்ந்து இறந்து வருகின்றனர் அண்மையில்கிராமங்களை விட்டு காடுகளுக்குள்ஒடிஒளித்திருந்த 35 பேர் தமது உயிரை அநியாயமாக இழந்தனர் இவர்களில் குழந்தைகளும் முதியவர்களும் அடங்குவர். இதுதவிர காட்டுக்குள் பாம்புக்கடியால் பெருந்தொகை மக்கள் இறந்துபோயினர் இவர்கள் ஓலைக்குடிசைக்குள்ளும், இலை தழையால் வேயப்பட்ட வீடுகளுக்குள்ளும் இருந்து இன்னல் படுவதாக அனைத்து பத்திரிகையாளர்களும் கூறினர்.

துன்பம் தீரவில்லை

மேலும் அவர்கள் கூறுகையில் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தத்தினால் இராணுவ நடவடிக்கைகளோ அன்றி முஸ்லிம் ஊர்காவற் படையின் அட்டகாசமோ ஓய்ந்து விடவில்லை போர் நிறுத்தத்தால் தென் தமிழீழ மக்கள் எதுவித நன்மையையும் அடையவில்லை அவர்களுடைய இன்னல்கள் தீர்ந்துபோகவில்லை என்றனர்.

என்,ஜீ.குழுக்கள் கவனிக்கவில்லை

இறுதியாக தென் தமிழீழ மக்களை என். ஜி. குழுக்கள் எனப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எவையும் யுத்த நிறுத்தத்திற்கு முன்பிலும் சரி யுத்த நிறுத்தத்தின் பின் சில கிராமங்களுக்கு சென்று தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய சந்தர்ப்பம் இருந்தபோதிலும் சரி உதவ முன்வரவேயில்லை. நாம் இங்குவரும் வரை எதுவித உதவியும் அற்ற நிலையில் தான இருந்தோம் என்று கூறி தமது மனக்கவலையை தெரிவித்தனர். (லோ)

---

ராணுவத்தின்...

தினர் வீதியில் எதிர்ப்பட்ட ஏழு பொதுமக்களை மோசமாகத் தாக்கியதுடன், இவர்களது சைக்கிள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர். முருகுப்பிள்ளை, பரமானந்தம், கணபதிப்பிள்ளை, நேச... உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 55 வயது வயோதிப மாதுவும், நாற்பதுவயதுடைய பெண்மணி ஒருவரும் பாலியல் வன்முறைக்குள்ளாகினர்.

மேலும் வெல்லாவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமைச் சேர்ந்த...

(கொழும்பு)

வளைகுடாவில் போர் ஏற்படுமானால் சிறிலங்காவின் தேயிலை ஏற்றுமதியில் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்ற அச்சத்தினை தேயிலை ஏற்றுமதியாளர்கள், தேயிலைக் கூட்டுத்தாபன தலைவர்கள் மற்றும் முகவர்கள் சிறிலங்கா வர்த்தகத்துறை அமைச்சிடம் தெரிவித்துள்ளனர்.

போர் ஏற்படும் இத்து ஐந்து வாரங்களுக்கு மேல் தேயிலை ஏலவிற்பனை இடம் பெறாது என்றும் இதனால் தேயிலையை களஞ்சியப்படுத்தமுடியாது என்றும், அவர்கள் தெரிவித்தனர். இதனால் தேங்கிக்கிடக்காத வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை 'ஏயர் லங்கா, நிறுவனம் விமானப் போக்குவரத்து காப்புறுதி 1,50,000 டொலர்களாக அதிகரித்திருப்பதாலும், எண்ணெய் விலை அதிகரித்திருப்பதனாலும் மேற்குலக மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பழம் மற்றும் காய்கறி விற்பனையை மேற்கொள்ள முடியாமல் இருக்கும் எனத் தெரிவித்தது.

# கப்டன் பாரூக், சீலன்; நினைவஞ்சலிக் கூட்டம்

(வண்ணார்பண்ணை)

வீரவேங்கைகள் கப்டன் பாரூக், சீலன் ஆகியோரின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 7ஆம் திகதி மாலை 6-00 மணிக்கு ஓட்டுமடம் சந்தியில் நடைபெற உள்ளது.

வண்ணார்பண்ணை சிற்றூரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் அத்துடன் "அஸ்தமனத்தில் ஓர் உதயம்" என்ற நாடகமும் பட்டிமன்றமும் நடைபெற உள்ளது

# லெப. கேணல் பாண்டியின் நினைவுக் கூட்டம்

(கொக்குவில்)

லெப். கேணல் பாண்டி (குட்டி)யின் 3ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கொக்குவில் மத்தி, கிழக்கு சிற்றூரவைகளும், விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும் இணைந்து இந்த ஏற்பாட்டினை ஒழுங்கு செய்துள்ளன

# பட்டம் விடும் படையினர்

(தெல்லிப்பளை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து நேற்றுக் காலை முதல் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிற்கு மேலே செம்பருந்து வடிவிலான பட்டம் ஒன்று பறக்க விடப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் பறக்க விடப்பட்டுள்ள வெள்ளை நிறத்திலான இப் பட்டத்தினை பெருந்திரளான மக்கள் தெல்லிப்பளைச் சந்தியில் நின்று பார்த்தனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது (ச)

---

வரலாற்று

கென யாழ் கோட்டை திறந்து வைக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. நேற்றும் ஏராளமான பொதுமக்கள் இந்தக் கோட்டைக்கு வந்திருந்தனர். கோட்டை வாயிலில் ஆயிரக்கணக்கான துவிச்சக்கர வண்டிகள் நேற்று நிறுத்தப்பட்டிருந்தன. உள்ளே ஆண்களும் பெண்களுமாக உல்லாசமாகசென்று பார்வையிட்டு வரும்போது கோட்டைக் கற்களுடன் வந்தனர். (லோ)

---

சாராயத்தின்

யில் தாம் சாராயத்தின் விலை ஏற்றத்தைச் சகித்துக்கொள்ள முடியாதிருப்பதாகவும் அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை அத்தியாவசியப் பொருள்களைப் பொறுத்த வரை யாழ் நகரில் விற்கப்படும் விலைகளிலும் பார்க்க அதி உயர்வான விலையிலேயே தற்போதும் சாவகச்சேரிப் பகுதி வர்த்தக நிலையங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால் இந்த விடயம்பற்றி எந்த வர்த்தகர்களும் எதுவித கவனமும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (லோ

---

க. பொ. த

பீத்த ரீட்சார்த்திகள் தோற்றலாம் என்றும், அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்பதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

அரசினால் வேட்டையாடப்பட்டுள்ளனர்.

---

இராணுவ

பட்டிருந்தது?

தென்மராட்சி, வடமராட்சி தீவுப்பகுதி, வலிகாமம்போன்ற பல பகுதிகளில் இருந்தும் வந்த பெருந்தொகையான பொதுமக்கள் கப்டன் அமலனுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து வலி-கிழக்கு அரசியற் பொறுப்பாளர் சங்கீதன் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. இராஜன் உட்பட பலர் உரையாற்றினார்கள்

அஞ்சலிக்கூட்டத்தின் பின்பு கப்டன் அமலனின் புகழுடல் இறுதிக் கிரியைக்காக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பான்ட்வாத்தியங்கள் சகிதம் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. வீடுகள் தோறும் பூரண கும்பங்கள் வைத்தும், பூக்கள்சொரிந்தும் மக்கள் அஞ்சலியைச் செலுத்தினர். இறுதியாக கோப்பாய் மாவீரர் மயானத்தில் பான்ட் வாத்திய மரியாதையும், இராணுவ அணிவகுப்பு மரியாதையும் இடம் பெற்றது இராணுவ மரியாதை வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. பின்பு கப்டன் அமலனின் புகழுடல் தீயுடன் சங்கமமாகியது. (மு)

---

மூக்கினுள்ளும்

அவர் மேலும் கூறுகையில் தம்முடன் கல்முனைப் பகுதியில் உள்ள துறைநீலாவணை கிராமத்தில்வைத்து பதினேழு பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களில் பகுதி பகுதியாக ஒவ்வொரு நாளும் இருவர் மூவராக இழுத்துச் செல்லப்பட்டு அரைகுறை உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்டனர் என்றும் கூறினார். அத்துடன் தினமும் சுத்தியல், கோடரிப்பிடி போன்றவற்றால் அடிக்கப்பட்டதாகவும் கூறியதுடன், தமக்கு முதல் இழுத்துச் செல்லப்பட்ட ஒருவர் மூக்கினுள்ளும், வாயினுள்ளும் தண்ணீர்பேணியால் மூச்சுத் திணறி உயிரை விட்டார் என்றும், அவரைக் கொஞ்சும்படி தமக்கு முதுகில் உதைத்ததாகவும், இதனால் தாம் இறந்த தனது நண்பனின் மீது வீழ்ந்து முத்தமிட்டதாகவும் கூறினார்.

இறுதியில் தெய்வாதீனமாக தாம் உயிர்பிழைத்து தப்பியதாகவும் அவர் கூறினார். ஆனால் உடல், உளவியல் ரீதியாக தாம் இன்றும் கஷ்டப்படுவதாகவும் அவர்கூறினார். (லோ)

---

புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட பிரசார பொறுப்பாளர் திரு. ஆஞ்ச

---

யாழ் பல்கலைக்

லும், நோயாலும், மருந்துவசதியின்மையாலும் தொடர்ந்து இறந்து வருகின்றனர் அண்மையில் கிராமங்களை விட்டு காடுகளுக்குள் ஒடிஒளிந்திருந்த 35 பேர் தமது உயிரை அநியாயமாக இழந்தனர் இவர்களில் குழந்தைகளும் முதியவர்களும் அடங்குவர். இதுதவிர காட்டுக்குள் பாம்புக்கடியால் பெருந்தொகை மக்கள் இறந்துபோயினர் இவர்கள் ஓலைக்குடிசைக்குள்ளும், இலை தழையால் வேயப்பட்ட வீடுகளுக்குள்ளும் இருந்து இன்னல் படுவதாக அனைத்து பத்திரிகையாளருக்கும் கூறினர்.

துன்பம் தீரவில்லை

மேலும் அவர்கள் கூறுகையில் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தத்தினால் இராணுவ நடவடிக்கைகளோ அன்றி முஸ்லிம் ஊர்காவற் படையின் அட்டகாசமோ ஓய்ந்து விடவில்லை போர் நிறுத்தத்தால் தென் தமிழீழ மக்கள் எதுவித நன்மையையும் அடையவில்லை அவர்களுடைய இன்னல்கள் தீர்ந்துபோகவில்லை என்றனர்.

என்,ஜீ.குழுக்கள் கவனிக்கவில்லை

இறுதியாக தென் தமிழீழ மக்களை என். ஜி. குழுக்கள் எனப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எவையும் யுத்த நிறுத்தத்திற்கு முன்பிலும் சரி யுத்த நிறுத்தத்தின் பின் கிராமங்களுக்கு சென்று தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய சந்தர்ப்பம் இருந்தபோதிலும் சரி உதவ முன்வரவேயில்லை. நாம் இங்குவரும் வரை எதுவித உதவியும் அற்ற நிலையில் தான இருந்தோம் என்று கூறி தமது மனக்கவலையை தெரிவித்தனர். (லோ)

---

வருகிறது. இவ் யுத்த நிறுத்த மீறலுக்கு முதற் பலி தான் கப்டன் அமலன். என்றார்.

---

ராணுவத்தின்

தினர் வீதியில் எதிர்ப்பட்ட ஏழு பொதுமக்களை மோசமாகத் தாக்கியதுடன், இவர்களது சைக்கிள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர். முருகுப்பிள்ளை, பரமானந்தம், கணபதிப்பிள்ளை, நேசதுரை, செல்வராசா, தங்கத்துரை, வடிவேல் ஆகியோரே இவ்வாறு சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்களாவர்.

மேலும் பாலையடி வெட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் அப்பகுதியிலுள்ள கனகசிங்கம் துரைராசா என்பவரது வீட்டைக் குண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

வெல்லாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் அப்பகுதியிலுள்ள பாலர் பாடசாலையினுள்ளும், வேறு இரு வீடுகளினுள்ளும் புகுந்து அங்கிருந்த பொருள்களை தமது வாகனங்களில் ஏற்றிவிட்டு இக்கட்டடங்களைக் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். நமசிவாயம், வசந்தராஜபிள்ளை, வீமாப்பிள்ளை, தங்கரத்தினம் என்பவர்களுக்குச் சொந்தமான வீடுகளே நாசமாக்கப்பட்டவைகளாகும்.

இவற்றைவிட நேற்றுமுன் தினமும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட இருதயபுரம் என்னுமிடத்தில்ரோந்து வந்த படையினரால் தேவா (24) என்ற பொதுமகன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இதே நாளன்று பாலையடி வெட்டைப் பகுதியில் அரசரத்தினம், தம்பிராசா, செல்வராசா, நாகமணி என்பவர்களுக்குச் சொந்தமான நான்கு வீடுகள் இராணுவத்தால் உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 55 வயது வயோதிபமாதுவும், நாற்பதுவயதுடைய பெண்மணி ஒருவரும் பாலியல் வன்முறைக்குள்ளாகினர்.

மேலும் வெல்லாவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் அந்தோனிப்பிள்ளை, மைலாப்போடி மகேந்திரராசா ஆகிய இருவருக்கும் சொந்தமான இரு கராஜுக்களையும், மேற்படி இருவரது வீடுகளையும் உடைத்து, அங்கிருந்த பொருள்கள் அனைத்தையும் தமது முகாமிற்கு ஏற்றிச் சென்றிருப்பதுடன், இராசம்மா, விநாயகமூர்த்தி, நடராசா, சுந்தரலிங்கம் ஆகியோரது வீடுகளையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்

அதே தினத்தில் ஒரு அரிசி ஆலையும் உடைக்கப்பட்டுப் பொருள்கள் இராணுவத்தால் சூறையாடப்பட்டன. சாவித்திரி கணபதிப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான இந்த அரிசி ஆலையில் இருந்த உதிரிப்பாகங்களைக் கழற்றிச் சென்றுள்ள இராணுவத்தினர் நெல் மூடைகளையும் களவாடிச் சென்றிருக்கின்றனர். மேலும் வாழைச்சேனைப்பகுதியில் உணவுப் பண்டங்களை கொள்வனவுசெய்தபொதுமக்களைச் சோதனையிட்ட இராணுவத்தினர் அவற்றைப் பறிமுதல் செய்துள்ளனர்.

இதேவேளை கடந்த 2ஆம் திகதியன்று மண்டூர்இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களால் மாளிகைக்கட்டுப் பகுதியில் வீரசிங்கன் பாண்டியன் (19), கந்தையா சின்னவன்(17) ஆகியோரைக் கைது செய்துள்ளனர். இவர்களது நிலைமை இதுவரை தெரியவரவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாண மகேந்திரா வீதி 31 ஆ இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.